
MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



Feast of

## St. John Mary Vianney

PATRON SAINT OF PARISH PRIESTS
August 4

*The priesthood is the
Love of the heart of Jesus.
When you see a priest,
think of our Lord.*

Printed Matter

To

BOOK POST

If Undeliveried please return to ...

Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852


# Bulletin
Diocese of Marthandam
மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




சுதந்திர தினம்

ஆகஸ்ட் 15

## இறையன்னையின் விண்ணேற்புத் திருநாள்

மலர் 21 ஆகஸ்ட் 2025 இதழ் 8

## Bishop's Diary

| | |
|---|---|
| Mission Appeal America<br>Departure for the mission visit | August 1st to August 31st |
| Arrival after Mission Visit | September 3 |

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை மரிய ஜாண்
ஆகஸ்ட் 04



அருட்தந்தை மரிய போப்பில் ரெவின்
ஆகஸ்ட் 04



அருட்தந்தை பெர்னார்ட்
ஆகஸ்ட் 20



அருட்தந்தை ஜாண் ஷிபு
ஆகஸ்ட் 29



## மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி தினம்

### ஆகஸ்ட் 3




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 ஆகஸ்ட் 2025 இதழ். 8


**Patron**
His Excellency
Most Rev. Vincent Mar Paulos

**Editor**
Rev. Fr. Franklin Jose
The Chancellor

**Cover Design**
Mrs. Uni Kumari B.

**Printing**
Santhom Press,
Marthandam

**Published By**
The Chancellor
Diocese of Marthandam





மலர். 22 ஜூலை 2025 இதழ். 7


**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam


மலர்.22 ஆகஸ்ட் 2025 இதழ்.8

## முக்கியமான நாட்கள்

ஆகஸ்ட் 2025

- 02 சர்வதேச நட்பு தினம்
- 09 உலக பழங்குடி மக்களின் சர்வதேச தினம்
- 12 சர்வதேச இளைஞர் தினம்
- 15 இந்திய சுதந்திர தினம்
- 19 உலக புகைப்பட தினம்
- 29 தேசிய விளையாட்டு தினம்
- 30 சிறு தொழில் தினம்

## உள்ளடக்கம்


1. Circular 03
2. வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் 72-வது நினைவு பாதயாத்திரை 12
3. மறைதூதுப் பணிக்குழு 13
4. மேய்ப்புப் பணி அறிவுரைக் குழு கூடுகை 14
5. Elected Pastoral Council Members from Eccelesiastical Districts 15
6. மறைபரப்பு தளச் செய்திகள் 18
7. குருமட செய்திகள் 18
8. மேரி மக்கள் துறவற சபை 19
9. MIDS 20
10. Health for One Million (Hom) 24
11. திருமண ஆயத்தப்பயிற்சி 24
12. MCYM 25
13. MCA 26
14. மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி, இலவுவிளை 28
15. பெத்தானியா விழா கொண்டாட்டம் 28
16. மறைவட்ட செய்திகள் 29
17. ஆயரின் ஜூலை மாத நிகழ்வுகள் 33
17. இம்மாதம் நினைவு கூர 35
19. Bishop's Diary 36
20. பெயர்விழா நல்வாழ்த்துக்கள் 36



*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852




# மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை
# மறைக்கல்வி தினம் - 2024

*அன்பார்ந்த குருக்களே, துறவிகளே, கோர்-எப்பிஸ்கோப்பாமார்களே, ஆசிரியபெருமக்களே, பெற்றோர்களே, அன்பு மாணவச் செல்வங்களே,*

மூவொரு இறைவனின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

நம்பிக்கை பயிற்சி தினம் இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ம் நாள் கொண்டாடப்படுகிறது. இன்றைய இளைய தலைமுறை சந்திக்கும் சவால்களுள் ஒன்று நம்பிக்கை பயிற்சியில் காணப்படும் ஆர்வமின்மை. சமூகத் தொடர்பு தொழில்நுட்பங்களில் இளைய தலைமுறை காட்டும் அளவுகடந்த ஆர்வமே இதற்கு முக்கிய காரணம்.

காணாமல் போன மகன் உவமையில் நாம் சந்திக்கும் ஊதாரி மைந்தனின் நிலை, அதாவது தந்தையின் வீட்டில் மகிழ்ச்சி காண இயலாத நிலை இன்றைய வளர் இளம் பருவ தலைமுறையை குறித்து நம்மிடம் பேசுகிறது (லூக் 15:11-32). தந்தையிடமிருந்து தனக்குரிய பங்கை பெற்றுக் கொண்டு அவன் வீடு விட்டு இறங்கினான். தாறுமாறாக வாழ்ந்து தனது சொத்தை பாழாக்கினான். உணவும் உதவுவாரும் இல்லாமல் வந்த போது தன் தந்தையிடம் திரும்பி வந்தான். தந்தையோ அவன் மீது பரிவு கொண்டு திரும்பி வந்த மகனை கட்டித்தழுவி முத்தமிட்டு ஏற்றுக்கொண்டார் என்பதை உவமையின் இறுதியில் நாம் பார்கிறோம்.

இக்கால இளைய தலைமுறையைக் குறித்து சிந்திக்கும் போது இந்த உவமை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. உவமையில் வரும்

இளைய மகனைப் போல வீட்டை விட்டு நெடுந்தூரம் சென்றவர்களின் எண்ணிக்கை குறைவே. ஆனால் குடும்ப உறவிலிருந்து மனதால் அகன்று நேரலைக் கூட்டுறவுகளாலும், வலைதள மகிழ்ச்சிகளாலும், நேரலைச் சந்தைகளிலிருந்து எளிதில் தேர்ந்தெடுக்கப்படும் வசதி வாய்ப்புகளுடன் பற்று கொண்டு ஏராளமான வளர் இளம் பருவத்தினர் பெற்றோரிடமிருந்து அகன்று போய்விட்டனர்.

வலைதளத்திலிருந்து கிடைக்கும் நட்புறவுகளுக்கு சில தனிச்சிறப்புகள் உண்டு. நமக்கு நாம் விரும்பும்படி பதில் மொழி கொடுக்க முடியும். கண்டித்து திருத்துதலுக்கு இடமில்லை. நம்முடைய விருப்பங்களுக்கு எதிர்ப்பு எழுந்து விடாது. எதிர்ப்பு அல்லது கண்டித்து திருத்துதல் கடந்து வந்தால் அந்த நிமிடத்திலேயே அந்த வாசலை எளிதில் அடைத்து விடலாம். தனக்கு விருப்பமான மனதுக்கு உகந்த கருத்துக்களை மட்டும் கேட்டு தனது மனதுக்கு மகிழ்வைத் தரும் உரையாடலை மட்டும் பகிர்ந்து முன்னோக்கி செல்ல இங்கே வாய்ப்புண்டு. அறிவுரைகளும், கண்டித்து திருத்துதல்களும், ஆபத்தில் விழாமல் தற்காத்து உடன் நடக்கும் நல்ல உறவுகளும், குடும்ப உறவுகளும், நட்புறவுகளும் புதிய தலைமுறையினருக்கு புதிராகவே தோன்றுகிறது. அந்த விபத்தில் விழுந்தாலும் அதனை உற்சாகப்படுத்துபவர்களும் கனவுகளை நனவாக்க அர்த்தமற்ற அறிவுரைகளை வழங்கவும் ஏராளமானோர் நேரலை தளங்களில் காத்திருக்கின்றனர். இளைய தலைமுறையினருக்கு இத்தளங்கள் இளைப்பாறும் பசும்புல் வெளியாக மாறிவிடுகிறது.

கட்டுப்பாடு இல்லாத நிலையின் ஆபத்தான பரிமாணங்களை நேரலை பொழுதுபோக்குகளில் பார்க்கிறோம். தனக்கு விருப்பமானதை எளிதில் நாடித்தேட உதவும் தொழில்நுட்ப வளர்ச்சி



நம்மை வியக்க வைக்கிறது. இளமையில் இயல்பாக வரும் எண்ணங்களை தவறான வழியில் அழைத்துச் சென்று ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்கின்ற இடங்களாக நேரலையும் வலைதளங்களும் மாறிவிட்டன. நேரலை விளையாட்டுக்கள் வன்முறையையும் போரிடும் குணத்தையும் நம்முடைய குழந்தைகளின் உள்ளங்களில் விதைத்து விடுகின்றன. காட்சிகளாலும் குரல்களாலும் அவர்களை மகிழ்விக்கும் ஊடகங்கள் சில வேளைகளில் பாலுணர்ச்சியின் தீய வடிவங்களை முதன்மைப்படுத்துகின்றன. இயற்கைக்கு மாறான மற்றும் மனிதநேயமற்ற பாலுறவுமுறைகளை பரவலாக்கம் செய்ய திட்டமிட்டு இயங்குகின்ற இயக்கங்கள் கூட உள்ளன. இயல்பான பாலுணர்வு கூட காட்சிப் பொருளாக மாறும்போது பாவ வீழ்ச்சி தோன்றுகிறது என்பதை நாம் அறிவோம். வளர் இளம் பருவத்தில் இத்தகைய ஆபத்துகளில் வீழ்கின்ற இன்றைய தலைமுறை தவறான எண்ணங்களில் வளர்ந்து பின்பு நெறி தவறி வாழ நேரிடுகிறது. ஆசைகள் வெறிகளாக மாறி குற்ற உணர்வில் வீழ்ந்து கல்வியும் உறவுகளும் நிலை தடுமாறி நிற்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை நம்மை பயப்படுத்தும் அளவில் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

நேரலை வியாபாரத் தளங்கள் பணம் இருந்தால் விரும்புவதெல்லாம் வாங்கலாம் என்ற எண்ணத்தை விதைத்து விட்டன. விளம்பர நோக்கிலுள்ள விற்பனையின் தாக்கத்தால் விரும்புவனவற்றையும் தேவையானவற்றையும் தெளிந்து தேர்ந்து கொள்ளும் விவேகத்தை இத்தலைமுறை இழந்துவிட்டது. வளர்இளம் பருவத்திலேயே இந்த கனவுலகத்திற்கு பாதை திறந்து போடப்படுகிறது. அனைத்தையும் வியாபார நோக்குடன் பார்க்கும் ஒரு கலாச்சாரத்தை நமது குழந்தைகள் உள்வாங்கியுள்ளனர்.

மறைக்கல்வியிலும் வழிபாட்டிலும் மாணவர்கள் ஆர்வம் காட்டுவதில்லையென்று நாம் குறை கூறுகிறோம். குடும்பங்களிலும் சரியான மனித உறவுகளிலும் இக்குழந்தைகள் ஆர்வம் காட்டுவதில்லையென்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு பிடித்தமான பகிர்தல்களாலும், அவர்களுக்கு விருப்பமான பொழுது போக்குகளாலும் நமது வீடுகளுக்குள்ளேயே அவர்கள் தனிமைப்பட்டு வாழ்கின்றனர்.

தனக்குத் தேவையானது தந்தையின் வீட்டில் இருக்கிறது என்ற அறிவுத் தெளிவுதான் காணமல் போன மகனை திருப்பி வரச் செய்தது. விரும்பியதெல்லாம் அங்கே இல்லை. ஆனால் தேவையானவை தாராளமாக இருந்தன. மேலும் திரும்பி வந்தால் தனது தந்தையின் இல்லத்தில் அவன் ஏற்றுக்கொள்ளப்படுவானென்ற திடமான எண்ணம் அவனுக்கிருந்தது. இளைய தலைமுறையை நம்பிக்கை வாழ்வுக்கும் குடும்ப உறவுகளுக்கும் திரும்பி வரச் செய்ய தேவைப்படுவது இதுவே. நொடிப்பொழுதில் மறையும் இன்பங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் அப்புறம் வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும் அன்பும் தோழமையும் குடும்பங்களில் குழந்தைகளுக்கு அனுபவமாக வேண்டும்.

குடும்ப உறவுகளை மேம்படுத்த பெற்றோர்கள் அதிக நேரம் குழந்தைகளுடன் செலவிட முயற்சிக்க வேண்டும். கல்வி, பொழுதுபோக்கு போன்றவற்றில் குழந்தைகள் தேவைக்கு மட்டுமே அலைபேசிகளை பயன்படுத்துகிறார்கள் என்பதை பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேண்டும். குடும்ப உறவுகளின் சந்திப்பிலும், பிறருக்கு நன்மை செய்யும் பணிகளிலும் அவர்களை உடனிருத்த வேண்டும். வாழ்க்கையின் இயல்பான துன்ப துயரங்களை கண்டறிந்து



இடையூறுகளில் பதட்டமடையாமல் வாழ அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். பிறருடைய அன்பை நாம் இழந்தாலும் ஆண்டவரின் அன்பு நம்மை கைவிடுவதில்லையென்று பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். அன்றாட செயல்களிலும் ஆலய வழிபாடுகளிலும் குழந்தைகளை பங்கேற்க வைத்தால் மட்டும் போதாது. திருவழிபாடு மற்றும் செபங்களின் பொருளை குழந்தைகளுக்கு விளக்கிக் கொடுக்க வேண்டும். திருவழிபாடுகளுக்குப் பின் பங்குதளத்திலுள்ள பிற குழந்தைகளுடன் நேரத்தை பகிர்ந்து கொள்ள உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களின் வயதிற்கேற்ற பொதுநலச் செயல்களைச் செய்து பொது இடங்களில் இணைந்த பொழுதுபோக்குகளுக்கு குழந்தைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உண்மையான மனித உறவுகள் பாதுகாப்பையும், மகிழ்ச்சியையும் தரும். மாறாக ஊடகங்களுக்கு அடிமைகளாக வாழ்ந்தால் உண்மை உறவுகள் அர்த்தமற்றவையாகிவிடும்.

பங்கு தளத்திலுள்ள நம்பிக்கை பயிற்சி இத்தகைய சவால்களுக்கு மத்தியில் புதிய பாதைகளை தேட வேண்டுமென்று அனைவரையும் அன்புடன் நினைவுபடுத்துகிறேன். திருவழிபாட்டிலும் மறைக்கல்வி வகுப்பிலும் மட்டும் பங்கேற்று பிரிந்து செல்கின்ற இடங்களாக பங்குதளம் சுருங்கி விடக்கூடாது. நல்ல நட்புறவுகளை கண்டடையவும் ஆளுமை வளர்ச்சி தரும் பொழுதுபோக்குகளுக்கு நேரம் செலவிடவும் கல்வி, தொழில்துறை போன்றவற்றில் குழந்தைகளை சரியான மார்க்கத்தில் வழிநடத்த பங்குகள் கவனம் செலுத்த வேண்டும். குழந்தைகள் ஆலயத்திலும், ஆலய வளாகத்திலும் ஆன்மீகம் மற்றும் மானிட முன்னேற்றத்திற்கும்

உதவுகின்ற முறையில் நேரத்தை செலவிட உற்சாகப்படுத்த வேண்டும். தொலைதொடர்பு கருவிகள் எதிர்மறை நோக்கத்தை ஏற்படுத்துவது ஊடகங்களின் பிரச்சனை அல்ல, மாறாக பயன்படுத்தும் முறைகள் முறையற்றதாக அமைவதே காரணம். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் தேதி புனிதர் நிலைக்கு உயர்த்தப்படும் அருளாளர் கார்லோ அகுத்தீஸின் வாழ்வு நமக்கு இதையே கற்பிக்கிறது. இணையதள உலகத்தில் பிறந்து வளர்ந்து வலைதளத்தின் நன்மையை பிற சகோதர்களின் நன்மைக்கும் நற்செய்தி பணிக்கும், தனது ஆன்மீக வளர்ச்சிக்கும் பயன்படுத்தி புனிதர் பதவியை அடையும் இப்புனிதரின் பரிந்துரை நமது குழந்தைகளுக்கு தூண்டுதலளிக்கட்டும். புனிதர் பட்ட நிகழ்வு நாளில் புனிதரின் தூய வாழ்க்கையின் செயல்களையும் நமது குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல பங்குதளத்தில் கவனிக்க வேண்டுமென்று அன்புடன் நினைவுபடுத்துகிறேன். நம்பிக்கை பயிற்சி தினம் ஆசீர்வதிக்கப்பட்டதாக அமையட்டுமென்று வாழ்த்துகிறேன். திருச்சபையின் அடிப்படையாகிய இத்திருப்பணியில் உடன்பணியாளர்களாக இருக்கும் அனைவருக்கும் இறையாசீர் கூறி நிறைவு செய்கிறேன்.

உங்கள் அனைவரையும் கடவுள் நிறைவாக
ஆசீர்வதிப்பாராக.

+ Eusebius

**† தோமாஸ் மார் எவுஸேபியோஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை நம்பிக்கை பயிற்சி
பணிக்குழு தலைவர் & பாறசாலை மறைமாவட்ட ஆயர்

20-07-2025
காதோலிகேட் மையம்,
பட்டம், திருவனந்தபுரம்.



இறையருளினாலும் திரு ஆட்சிபீடத்தின் அனுகூலத்தாலும்
மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்
பெருந்தகை **வின்சென்ட் மார் பவுலோஸ்**
ஆண்டகையிடமிருந்து தம் ஆளுகைக்
குட்பட்ட அனைத்து குருக்களுக்கும்
துறவிகளுக்கும் இறைமக்கள்
அனைவருக்கும்
ஆசீர்.

Pro. No. EPL2/2025 26.07.2025

## மேய்ப்பு மடல்

***அன்பார்ந்த அருட்தந்தையர்களே, பாசமிகு துறவிகளே, அன்பு இறைமக்களே!***

ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் அனைவருக்கும், வாழ்த்துகளும், வணக்கங்களும். திருப்பலி நமது வாழ்வின் மையமாக திகழ்கிறது. இறைவார்த்தையும் நற்கருணையுமின்றி நமது ஆன்மீக வாழ்வு அமையாது. நாம் ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு திருப்பலியும் மீட்பு வரலாற்றை பிரதிபலிக்கிறது. அதன் சிகரமாகிய இயேசுவின் நற்கருணை நிறுவுதல், பாடு, மரணம், உயிர்ப்பு இவற்றை மீள்நிகழ்வாக்கம் செய்கிறது. ஒவ்வொரு திருப்பலியும் நன்றித்திருப்பலியே. ஏனெனில் தந்தைக் கடவுள் தம் ஒரே மகனை தருமளவுக்கு நம்மீது அன்பு கொண்டார். அந்த இறைமகன் இயேசு, தன்னையே தற்கையளிப்பு செய்து பாவ நிலையிலிருந்த நம்மை அருள்நிலைக்கு கொண்டு வந்தார். இதற்காக நன்றி தெரிவிக்கும் பலியே திருப்பலி.

தமது உடலையும் இரத்தத்தையும் அப்ப இரச வடிவங்களில் நமக்குத் தந்த ஆண்டவர் இதை அவர் நினைவாக செய்யும்படி கட்டளையிட்டார்.

இயேசுவின் தியாக பலி நம்மை பாவ நிலையிலிருந்து அருள் நிலைக்கு கொண்டு வந்தது. அவர் பெற்றுத் தந்த மீட்பை நமதாக்கிக் கொள்ள ஆண்டவர் தந்த அருளடையாளமே திருப்பலி. அவரது கட்டளையின்படி அதனை அனுதினமும் நிறைவேற்றும் நற்பேறு தற்போது கத்தோலிக்கத் திருச்சபை மக்களுக்கு மட்டுமேயுள்ளது. ஒரு முறை மட்டும் கொல்கோதாவில் உயிர்தியாகம் செய்த ஆண்டவர் ஒவ்வொரு திருப்பலியிலும் தன்னை பிரசன்னமாக்கி உயிர் தியாகம் செய்கின்றார். நம் உள்ளங்களில் வந்து உறைந்து தங்கிட தாகம் கொள்கின்றார். கல்வாரி மலையில் தாகமாய் இருக்கிறது என்ற ஆண்டவர் நற்கருணையில் வீற்றிருந்து வழிதவறிப்போன ஆன்மாக்களுக்காக தாகம் கொண்டு காத்திருக்கின்றார். எனவே திருப்பலியானது ஆண்டவரை சந்தித்து, அவரோடு இரண்டறக் கலந்த அனுபவம் பெறும் கொண்டாட்டமாகும். இத்திருப்பலியில் தகுதியுடன் பங்கேற்போர் கடவுளின் அன்பிரக்கத்தையும் அருளையும் பெற்றுக் கொள்வது உறுதி. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவோ, வேண்டுதலுக்காகவோ, நன்றியாகவோ, புகழ்ச்சியாகவோ நாம் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது, நமது பங்கேற்பின் அடையாளமாக திருப்பலி காணிக்கை செலுத்துகிறோம். ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுநிலையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு திருநிலையில் அமர்த்தப்பட்ட குருக்கள் இறை மக்களுக்காக இறைவனுக்கு பலி ஒப்புக்கொடுத்து ஜெபிக்கின்றார்கள். “நீர் தேர்ந்தெடுத்து உம்மருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறு பெற்றோர்; உம் கோவிலின் முற்றங்களில் அவர்கள் உறைந்திடுவர்; உமது இல்லத்தில், உமது திருமிகு கோவிலில் கிடைக்கும் நன்மைகளால் நாங்கள் நிறைவு பெறுவோம்” (திரு. பா. 65:4). குருக்கள் ஆண்டவர் கோவிலிலிருந்து கிடைக்கும் நன்மைகளால் வாழ வேண்டும். கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசிபெற்றோருக்கு ஆன்மீக நலன்கள் மட்டுமின்றி அன்றாட வாழ்வுக்கு தேவையானவையும் தேவைப்படுகிறது. எனவே திருச்சபையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் குருவுக்கு திருப்பலி காணிக்கை கொடுப்பது திருச்சபையின் மரபாக இருந்து வருகிறது. இது நமது தியாகத்தின் அடையாளமாகவும் தியாக பலியிலுள்ள பங்கேற்பின் அடையாளமாகவும் அமைகிறது. திருப்பலி காணிக்கை என்பது காசு கொடுத்து கடவுளின் அருளை வாங்கும் செயல் அல்ல. மாறாக சுயவிருப்பத்தால் வழங்கும் காணிக்கை. இது காணிக்கை வழங்குபவரை




கிறிஸ்து செலுத்திய தியாக பலியில் பங்கேற்க வைக்கிறது. எனவே திருப்பலி காணிக்கை மெய்வருத்தி கொடுப்பதாக இருந்தால் மிகுந்த பலனைத் தரும். பலியின் மூலமாகக் கிடைப்பதை பணம் மூலமாக பெற்றுக்கொள்ள இயலாது என்பதை நாம் அனைவரும் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் ஆலயத்திற்கு வரும் போது பல்வேறு வகையான உணர்வுகளை சுமந்து வருகிறோம். வெற்றி தோல்விகள், கவலைகள், நோய்கள் என மனிதனை வாட்டி வதைக்கின்ற சூழல்கள் பலவகை. இச்சூழல்களிலிருந்து விடுதலை பெற பொருத்தனைகள் செய்து ஜெபிக்கின்றோம். இறந்தோருக்காகவும், வாழ்வோருக்காகவும் திருப்பலிகளில் சிறப்பு செபங்கள் ஏறெடுக்கின்றோம். சில சமயங்களில் தனிப்பட்ட கருத்துகளுக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது கருத்துக்களை சமர்ப்பிப்பவர்கள் குருக்களுக்கு காணிக்கை கொடுப்பது நமது வழக்கம். இதுவரை திருப்பலிக்கான காணிக்கை ரூ.100 என்று வழக்கத்தில் இருக்கிறது. தமிழக ஆயர் பேரவையின் தீர்மானத்தின்படி 2025 செப்டம்பர் 1-ம் தேதி முதல் திருப்பலிக்கான காணிக்கை ரூ. 150 என நிச்சயிக்கப்பட்டுள்ளது. எனவே இறைமக்கள் திருப்பலி கருத்துக்கள் சமர்ப்பிக்கும்போது இதனை கருத்தில் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அருட்தந்தையர்கள் ஏற்கனவே (ஜூலை 11, 2024) தரப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை கவனத்தில் கொள்ளவும், திருப்பலி கருத்துக்கள் அருள்வாழ்வின் புனிதம் என்பதை உணரவும் கடமைப்பட்டவர்கள் என்பதை நினைவூட்டுகிறேன். இவ்வித ஒழுங்கு நெறிமுறைகளை பின்பற்றி திருப்பலி ஒப்புக்கொடுக்க அன்புடன் பணிக்கிறேன்.

இறையாசீர் உங்களோடு தங்குவதாக.

***அன்புடன்,***



**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

## வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் 72-வது நினைவு பாதயாத்திரை

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு திருநாளை முன்னிட்டு நடைபெறும் பாதயாத்திரை ஜூலை மாதம் 13-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று கிறிஸ்து அரசர் பேராலயம், மார்த்தாண்டத்தில் காலை 6:30 மணிக்கு மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் காலை ஜெபத்தை தொடர்ந்து திருப்பலியுடன் ஆரம்பமானது. இதில் நம் மறைமாவட்ட குருக்கள், அருட்கன்னியர்கள், குரு மாணவர்கள், இளையோர்கள் மற்றும் இறைமக்கள் பக்தியுடனும் ஆர்வத்துடனும் பங்கேற்றனர்.

பாதயாத்திரையானது காலை 8.30 மணியளவில் ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிறைட் அவர்கள் மற்றும் மறைமாவட்ட MCYM இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் நெல்லிக்காவிளை அவர்கள் முன்னிலையில் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் ஆரம்பமானது. மேதகு ஆயர் அவர்கள் மறைமாவட்ட இளைஞர் இயக்க தலைவர் ஆஸ்பின் ரிச்சர்ட்டிடம் திருச்சிலுவையும் மறைமாவட்ட இளைஞர் இயக்க செயலரிடம் கொடியையும் வழங்கி பாதயாத்திரையை தொடங்கி வைத்தார்.

பாதயாத்திரையானது 14.07.2025 திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் பட்டம் பேராலயத்தை சென்றடைந்தது. மறைமாவட்ட MCYM இயக்குநர் தந்தை அவர்கள், மறைமாவட்ட குருக்கள், இளையோர் இயக்க தலைவர் மற்றும் அருட்சகோதரி இயக்குனர் ஆகியோரால் திருச்சிலுவையானது மார் இவானியோஸ் ஆண்டகையின் கல்லறையில் முன்பாக வைக்கப்பட்டது. அன்றைய தினம் இரவு கர்தினால் மோறோன் மோர் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கோஸ் அவர்கள் தலைமையில் அனைத்து ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள். இளையோர்கள். இறைமக்கள் என அனைவரும் இணைந்து மெழுகுவர்த்தி பவனியில் பக்தியுடன் பங்கேற்றனர்.

ஜூலை 15-ம் தேதி காலை 8:00 மணியளவில் பட்டம் பேரலயத்தில் வைத்து காலை ஜெபமும், ஆடம்பர கூட்டுத்திருப்பலியும் கல்லறையில் தூப மன்றாட்டும் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ரோமை திருப்பீடத்தின் சர்வதேச வாரியத்தின் காரியதரிசியாக செயல்படும் மேதகு பேராயர் போள் கல்லகர் ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு மறையுரை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வுகளில் நம் மறைமாவட்ட ஆயர், அருட்தந்தையர்கள். அருட்கன்னியர்கள், அருட்சகோதரர்கள் மற்றும் இறைமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மறைத்தூது பணிக்குழு

மறைமாவட்ட மறைத்தூது பணிக்குழு சார்பாக இல்லம் சந்திப்போருக்கான சிறப்புப் பயிற்சி வகுப்பு அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் அவர்களால் ஜூலை 19 அன்று தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடத்தப்பட்டது.

ஜூலை 12 அன்று நம் மறைமாவட்ட மறைதூது பணிக்குழுவின் சங்கமம் நடைபெற்றது. இதில் ஆயர் அவர்கள் மார் இவானியோஸ் ஆண்டகையின் மறைதூது பணி குறித்து வகுப்பு நடத்தினார். இதுவரை மறைத்தூது பணிக்குழுவை வழிநடத்திய அருட்தந்தை ஜெபின் அவர்களுக்கு வாழ்த்துக்களும் நன்றியும் கூறப்பட்டது.

ஜூலை மாதம் 21 -ஆம் தேதி முதல் புஷ்பகிரி பங்கில் இல்ல சந்திப்பு நடைபெற்று வருகிறது.

# மேய்ப்புப் பணி அறிவுரைக் குழு கூடுகை

மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு கூட்டம் 26.07.2025 அன்று ஆயர் இல்ல அரங்கத்தில் வைத்து மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலர் திரு. M. அருள்தாஸ் அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. புதிதாக தேர்வு செய்யப்பட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் மேதகு ஆயர் அவர்கள் ஒவ்வொருவராக அறிமுகம் செய்து பணி ஆணை வழங்கினார்கள். மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிறைட், மறைமாவட்ட செயலர் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் ஆகியோர்கள் முன்னிலையில் உறுப்பினர்கள் அனைவரும் உறுதிமொழி ஏற்று, திருவிவிலியம் முத்தம் செய்து, 2025 முதல் 2027 ஆம் ஆண்டு காலத்திற்கான உறுப்பினர்களாக நியமனம் பெற்றார்கள். பின்னர் மேய்ப்புப் பணி அறிவுரைக் குழுவின் புதிய செயலராக திரு. M. அருள்தாஸ் அவர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். பாறசாலை மறைமாவட்ட மேதகு ஆயர் தோமஸ் மார் எவுசேபியோஸ் ஆண்டகை அவர்கள் புதிய உறுப்பினர்கள், விசுவாசம், இறை ஆராதனை, பிறமக்களுக்கு சாட்சிகளாக, இணைந்து செயல்பட வேண்டும் என வாழ்த்துரை வழங்கினார். நமது மறைமாவட்ட மேதகு ஆயர் அவர்கள் மறைமாவட்ட ஆயர், அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், இறைமக்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என வாழ்த்தினார்கள். மறைமாவட்ட குருகுல முதல்வர் அவர்கள், இப்பணி இறை அழைத்தல் எனவும், மறைமாவட்ட வளர்ச்சி பணி செய்ய கிடைத்த வாய்ப்பு எனவும் வாழ்த்தினார்கள். தொடர்ந்து நடைபெற்ற மறைமாவட்ட அருட்தந்தையர் களின் கூடுகையின்போது முனைவர் பட்டம் பெற்று திருத்தந்தையின் தூதரக பணியில் வெற்றிபெற்ற அருட்தந்தை யூஜின் அவர்களை அருட்தந்தை டார்பெல்லோ கிறிஸ்டஸ் அவர்கள் வாழ்த்தி பேசினார்கள். மறைமாவட்ட மேய்ப்புபணி அறிவுரைக்குழு சார்பாக அருட்தந்தை யூஜின் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். பின்னர் மறைமாவட்ட செயலர் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் மற்றும் ஒவ்வொரு இயக்கங்களின் ஆன்மீக இயக்குநர்களின் கருத்துரைகள், மேய்ப்புப் பணி அறிவுரைக் குழுவினரின் கருத்துரைகள், பெருவிளை திருத்தலம் மற்றும் மறைமாவட்ட வளர்ச்சிக்கான கலந்துரையாடல், மேதகு ஆயர் அவர்களின் பதிலுரையுடனும், இறுதி ஆசீருடனும் கூட்டம் நிறைவு பெற்றது.



# Elected Pastoral Council Members from Ecclesiastical Districts

## 1. Marthandam District - Elected Members

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mr. Arul Das (Secretary) | Vimalapuram |
| 2. | Mr. Selvam | Marthandam |
| 3. | Mrs. Glory | Chitharal |
| 4. | Mr. Robinson | Unnamalaikadai |

## 2. Kulasekharam District - Elected Members

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mr. Silvans | Muthalar |
| 2. | Mr. Justin | Verkilambi |
| 3. | Mrs. Viji Kala | Mathar |
| 4. | Mrs. Masil Mary | Cherupaloor |

## 3. Panachamoodu District - Elected Members

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mrs. Elsy | Panachamoodu |
| 2. | Mr. Christopher V. | Keezhmancode |
| 3. | Mr. Prabin K. Rajendran | Kanchiyodu |
| 4. | Ms. Jayalet Rani | Arumanai |

## 4. Kollemcode District - Elected Members

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mrs.Vijila Rani | Kaduvakuzhi |
| 2. | Mr. John | Adaikakuzhi |

| | | |
|---|---|---|
| 3. | Mr. John Benedict | Fathimanagar |
| 4. | Mr. Dr. Sherlin | Ambilikonam |

**5. Kaliyakkavilai District - Elected Members**

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mr. Salim | Mecode |
| 2. | Mr. John | Nadaikkavu |
| 3. | Mr. Paul Raj | Koickathoppu |
| 4. | Mrs. Rejitha | Mariagiri |

**6. Azhagiyamandapam District - Elected Members**

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mr. Justus | Chellamkonam |
| 2. | Mr. Raj (Eng.) | Plankalai |
| 3. | Mr. Michael Devasahayam | Kaattuvilai |
| 4. | Mrs. Latha | Chenam Vilai |

**7. Nagercoil District - Elected Members**

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mrs. Agnes | Christhuvilagam |
| 2. | Mr. Jeyaram | Irachakulam |
| 3. | Mr. Rajesh | Beach Road |
| 4. | Mr. Suman | Aanapottai |

**8. Mission Area - Elected Members**

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mr. Dr. Thomas | Trichy |
| 2. | Mrs. Sujatha | Devadhanapatti |



**9. Nominated Members**

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mr. Eng. Francis Raj | Palavilai |
| 2. | Mr. Aswalt Hopper | Kirathoor |
| 3. | Mr. Dr. Vino | Marthandam |
| 4. | Mr. Eng Arul Praban | Trichy |
| 5. | Mr. Chrystal Antony | Nagercoil |
| 6. | Mr. Devaraj | Themanoor |
| 7. | Mr. Manohar | Nagercoil |
| 8. | Mr. Binu | Kulasekaram |
| 9. | Adv. Robi | Mariagiri |
| 10. | Mrs. Dr. Manjusha | Nadaikkavu |

**10. Representatives**

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mr. Sathyanesan (Trained Catechists) | Palavilai |
| 2. | Mr. Dr. Anish John Paul (Colleges) | Kannacode |
| 3. | Mrs. Shanthi (Schools) | Ambilikonam |

**11. *Bar IthoKasiro - Bar IthoKasirtho***

| No. | Name | Parish |
|---|---|---|
| 1. | Mr. Chrystal John | Nagercoil |
| 2. | Mrs. Vasanthakumari | Koikathopu |

# மறைபரப்பு தளச் செய்திகள்

❖ திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு அருகே ஜேஜே நகர் மறைபரப்புதளம் உள்ளது. ஜூன் மாதம் இறுதியில் 10 சென்ட் நிலம் வாங்கப்பட்டு ஜூலை மாதம் 22 -ம் தேதி ஆழ்துளை கிணறு போடப்பட்டது.

❖ களக்காடு நல்லநாதபுரத்திலும், ஜேஜே நகர் மறைபரப்புதளத்திலும் மற்றும் நைஸ்நகர் மறைபரப்புதளத்திலும் பள்ளிக்கூடம் செல்லும் சிறார்களுக்கு பேக் மற்றும் நோட்டு புத்தகங்கள் மிட்ஸ் சார்பில் கொடுக்கப்பட்டது.

❖ தேவதானப்பட்டி மறைபரப்பு தளத்தின் தூய தேவ சகாயம் கைத்தறி நிலையத்தில் முதற்கட்ட கைத்தறி பயிற்சியானது 16-ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது.

# குருமட செய்திகள்

❖ 02.07.2025-ஆம் நாள் அன்று மறைமாவட்ட ஆயர் அருட் சகோதரர்களை சந்தித்து அவர்களோடு கலந்துரையாடிய பின் மாலை ஜெபத்தை நடத்தினர்.

❖ ஜூலை 3-ஆம் நாள் புனித தோமையாரின் நினைவு நாளானது குருமடத்தில் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. அந்நாளை சிறப்பிக்கும் விதமாக, புது குரு அருட்தந்தை ரெவின் அடிகளார் திருப்பலி அற்பித்து அருட்சகோதரர்களுக்காக ஜெபித்தார்.

❖ 14.07.20025 அன்று நடந்த ஆயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுநாள் பாதையாத்திரையில் அருட்சகோதரர்கள் பங்கெடுத்தனர். ஆயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுநாளை முன்னிட்டு 15.07.2025-ஆம் தேதியன்று திருவனந்தபுரம், பட்டத்தில் வைத்து நடந்த நினைவுநாள் திருப்பலியில் பங்கெடுத்தனர்.

❖ 25.08.2025 அன்று அருட்தந்தை யூஜின் அவர்கள் குருமடத்தில் திருப்பலி மறையுரை அர்ப்பித்து அருட்சகோதரர்களுக்காக ஜெபித்தார்.

❖ 26.07.2025 -ஆம் நாள் சனிக்கிழமை அன்று மாதாந்திர தியானமானது குருமடத்தில் நடந்தது. அருட்தந்தை ஜாண் ஷிபு தியானத்தை வழிநடத்தினார்.



# மேரி மக்கள் துறவற சபை

மேரி மக்கள் கன்னியர் சபையின் துணை நிறுவனரான மதர் மேரி கல்லறைக்கல் அவர்களின் 40-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மதர் மேரி அவர்கள் இறுதி நாட்களில் வாழ்ந்து இறந்த இடமாகிய பொங்குமூடு மடத்தில் வைத்து 29.07.2025 அன்று காலை 11:00 மணிக்கு மலங்கரை கத்தோலிக்க திரு அவையின் தலைவரும் தந்தையுமாகிய மோறான் மோர் கர்த்தினால் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்க ஆண்டகை அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டு தொடர்ந்து நினைவு கூட்டமும் நடைபெற்றது. காதோலிக்க பாபா அவர்கள் மதர் மேரி அவர்களின் வாழ்க்கையை பற்றி நினைவுரையாற்றினார்கள். தொடர்ந்து அவர்கள் இறுதி நாட்களில் வாழ்ந்த அந்த அறையில் சிறப்பு ஜெபம் நடைபெற்றது 30.07.2025 அன்று காலை 6.30 மணிக்கு பாறசாலை மறைமாவட்ட ஆயர் தோமஸ் ஏவுசேபியோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண்சிஞ்ஞோர் ஜோஸ் பிரைட் மற்றும் மறைமாவட்ட குருக்கள் இணைந்து திருப்பலியும், அதனைத் தொடர்ந்து கல்லறையில் தூபம் மன்றாட்டும் நடைபெற்றது. தொடர்ந்து மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் அனைத்து பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கான போட்டிகள் 22.07.2025 அன்று நடத்தப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கு ஊக்க தொகையும் கேடயமும் வழங்கப்பட்டது. இந்த போட்டிகள் நன்முறையில் நடைபெறுவதற்கு உதவிய அத்தனை நல் உள்ளங்களுக்கும் மேரி மக்கள் கன்னியர் சபையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகள்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## தன்னார்வலர் ஒருங்கிணைப்புகூட்டம்

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டுவரும் எழுவோம் இயக்கத்தின் சார்பாக அந்த இயக்கத்தில் உள்ள தன்னார்வலர்களுக்கான வருடாந்திர கூடுகை 20.06.2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இந்த கூட்டத்தினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையேற்று துவங்கி வைத்தார்கள். மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் திட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்கள். பின்னர் அருட்சகோதரி மிக்கேலம்மா அவர்கள் தன்னார்வலர்களின் பண்புகள் மற்றும் பணிகள் குறித்து கருத்துரை வழங்கினார்கள். தன்னார்வலர்கள் தன்னம்பிக்கை, பொறுமை, எதிர்பார்ப்பின்மை, சிறந்தபேச்சாற்றல், நேரம் செலவிடுதல் மற்றும் குழுவாக இணைந்துசெயல்படுவதற்கானமனம் ஆகியவற்றை கொண்டிருத்தல் வேண்டும் என்றும், நோயாளிகள் பராமரிப்பு, நலவாழ்வுப்பணிகள், கல்விப்பணிகள் இயற்கை பேரிடர் காலங்களில் முன்னின்று செயல்படுதல் போன்ற பணிகளை ஆர்வத்தோடு செய்ய முன் வருதல் ஆகியவையே தன்னார்வலர்களுக்கான தகுதிகள் என்று மிகவும் தெளிவாக விளக்கமளித்தார்கள். பின்னர் இந்த பணியில் தொடர்ந்து செயல்பட விருப்பம் உள்ள நபர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டன. தொடர்ந்து அனைவரும் தன்னார்வல பணியை ஏற்கும் உறுதிமொழி எடுத்துக் கொண்ட பின் கூட்டமானது நிறைவுபெற்றது.

## உலககைம் பெண்கள் நாள் – சிறப்பு மாநாடு

மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூகப்பணி மையமான மிட்ஸ் நிறுவனத்தில், கைம்பெண்களின் சமூக, பொருளாதார



முன்னேற்றத்திற்காக 'மரியன் இயக்கம்' என்ற அமைப்பு சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. இந்த மரியன் இயக்கமானது உலக கைம் பெண்கள் தினமான 23.06.2025 அன்று காலை 10 மணிக்கு இந்த இயக்கத்தில் உள்ள அனைத்து கைம்பெண்களையும் ஒருங்கிணைத்து, மிட்ஸ் கலை அரங்கத்தில் வைத்து சிறப்பு மாநாடு ஒன்றை நடத்தியது. இந்த இயக்கத்தை மேலும் வலுப்படுத்தவும், கைம் பெண்களின் நலவாழ்விற்காக குரல் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கூட்டத்தினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவக்கி வைத்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் கைம்பெண்களின் நலனுக்காக, மிகச்சிறப்பாக இயங்கி வரும் கைகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி கார்மல் மேரி மற்றும் களப்பணியாளர் திருமதி ஆன்லெட் ஆகியோர் கலந்துகொண்டு, கைம்பெண்கள் சந்திக்கும் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் உளவியல் பிரச்சனைகள் குறித்தும் அவற்றிலிருந்து விடுபடும் வழிகள் குறித்தும் விளக்கமளித்தார்கள். பின்னர் கைம்பெண்கள் குழுக்களாக அமர்ந்து, அவர்கள் சமூகத்தில் சந்திக்கும் சவால்கள், சமூக, பொருளாதார, உளவியல் பிரச்சனைகள் குறித்து விவாதித்தார்கள். இறுதியில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதாவது, அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற,கைம் பெண்களுக்கான மேம்பாட்டுதுறை உருவாக்க அரசினை கேட்டு மனு சமர்ப்பிப்பது, குமரிமாவட்டத்தில் கைம்பெண்கள் நலனுக்காக உழைக்கும் நிறுவனங்களுடன் இணைந்து, குமரிமாவட்டத்தில் உள்ள அனைத்து கைம்பெண்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும் எனவும், கைம்பெண்கள் நலனுக்கான மரியன் இயக்கத்தை வலுப்படுத்த, மண்டல மற்றும் மிட்ஸ் அளவிலான நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பதும், மூன்று வருடத்திற்கான திட்டம் ஒன்றை வடிவமைக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற

பொதுக்கூட்டத்தில் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு, நீங்கள் கைம்பெண்கள் அல்ல கைவன்மை உடையவர்கள் என்றும், சமூகத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு ஒரு தனிக் கவனம் உண்டு என்றும், பெண்கள் வலிமை மிக்கவர்களாக, தன்னம்பிக்கையோடு உழைத்து வாழவேண்டும் என்றும், எந்த வேலையும் தாழ்வானது அல்ல உழைத்து வாழ்வதே உயர்வான வழி என்றும் வாழ்த்தினார்கள்.

கூட்ட இறுதியில், மிட்ஸ் நிறுவனம் சார்பாக புற்று நோயாளர்களின் வழிகாட்டுதலுக்காக அச்சிடப்பட்ட புற்றுநோய் பற்றிய தகவல்கள், தமிழ்நாடு கன்னியாகுமரி மற்றும் திருவனந்தபுரம் மாவட்டங்களில் உள்ள புற்றுநோயாளர் சிகிச்சை மையங்கள், புற்றுநோய் கவனிப்பு மையங்கள், வலி நிவாரணி மற்றும் ஆற்றுப்படுத்தல் சேவைமையங்கள், புற்றுநோய் காப்பீடு ஆகிய தகவல்கள் உள்ளடங்கிய 'குமரி புற்றுநோய் பராமரிப்புகையேடு' என்ற இதழை ஆயர் அவர்கள் வெளியிடகைகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி கார்மல் மேரி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து மரியன் இயக்க உறுப்பினர் திருமதி மினி அனைவருக்கும் நன்றி கூற நிகழ்வானது இனிதே நிறைவு பெற்றது. இந்த கூட்டத்தில் மிட்ஸ் மண்டல இயக்குநர்கள், மிட்ஸ் பணியாளர்கள், மரியன் இயக்க உறுப்பினர்கள் என மொத்தம் 200-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

## உதவித்திட்டங்கள்

25.06.2025 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக களியக்காவிளை பணி மண்டலத்தின் 12 சுய உதவி குழுக்களில் உள்ள 48 உறுப்பினர்களுக்கு பல்வேறு செயல்பாடுகளுக்காக ரூபாய் 24,00,000/- கடனாக வழங்கப்பட்டது.



01.07.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டம் சார்பாக All for Life திட்டத்தில் உள்ள 3 பயனாளிகளுக்கு ரூபாய் 19,440/- மற்றும் Forderverein திட்டத்தில் உள்ள ஒரு பயனாளிக்கு ரூபாய் 9450/- சிறப்பு நிதி உதவி வழங்கப்பட்டது.

## பிறநிகழ்வுகள்

09.07.2025 அன்று மிட்ஸ் தினத்தை முன்னிட்டு மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை தலைமையில் சிறப்பு நன்றி திருப்பலி மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் ஆயர் மற்றும் மறைமாவட்ட முதன்மைகுரு மோண் ஜோஸ் பிறைட் அவர்களும், மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் மண்டல இயக்குநர்களும் கலந்துகொண்டனர். கூட்டத்தில், மிட்ஸ் பணியாளர்கள் தங்கள் பணிவாழ்வின் அனுபவங்களை பகிர்ந்தார்கள். தொடர்ந்து அனைவருக்கும் நினைவு பரிசு, தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டு கூட்டமானது இனிதே நிறைவு பெற்றது.

11.08.2025 அன்று மரியன் இயக்கம் சார்பாக மறைமாவட்டத்தில் உள்ள விதவைகளின் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்வதற்காக மிட்ஸ் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களை ஒருங்கிணைத்து வழிகாட்டுதல்கள் மற்றும் படிவங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

12.07.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் மாதாந்திர சிறப்பு பயிற்சி மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. தாய்மார்களுக்கு திரு. ஜீவகுமார் அவர்களால் நேர்மறை எண்ணங்கள் என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் 46 மாணவர்களும், 35 தாய்மார்களும் கலந்துகொண்டனர்.

# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

- ❖ 18.7.2025 அன்று இயற்கை மருத்துவம் மற்றும் போதையில்லா பாதை TOT பயிற்சியானது உண்ணாமலைகடை மலங்கரை கத்தோலிக்க ஆலய வளாகத்தில் நடைபெற்றது.
- ❖ 21.07.2025 அன்று போதையில்லா பாதை குறித்து பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது தென்தாமரைகுளம், கொட்டாரம் பெண்கள் சுயஉதவிக் குழுவில் வைத்து நடைபெறற்றது. மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் செயலர் திரு. ஜாண் மற்றும் மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு செயலர் திரு. அருள்தாஸ் ஆகியோர் விழிப்புணர்வுரையாற்றினார்கள்.
- ❖ 20.7.2025 அன்று Cancer நோயாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகை HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்களால் வழங்கப்பட்டது.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 ஆகஸ்ட்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **22, 23** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# MCYM
## Youth Apostolate

- ✶ வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் 72-வது நினைவு பாதயாத்திரை நம்முடைய மறைமாவட்ட தேவாலயங்களிலுள்ள அனைத்து பங்குகளிலும் திருச்சிலுவை கொண்டு செல்லப்பட்டு இறுதியாக மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து நன்றித்திருப்பலி நிறைவேற்றி பட்டம் புனித மரியன்னை உயர் பேராலயத்தில் பேராயரின் உடல் துயில் கொள்கின்ற பட்டம் புனித மரியன்னை உயர் பேராலயத்தில் வரை பாதயாத்திரையாக நடந்து செல்லப்பட்டது. இப்பாதயாத்திரையினை MCYM இளைஞர் இயக்கம் தலைமையேற்று நடத்தினார்கள். சுமார் 150-க்கும் அதிகமான பாதயாத்திரிகள் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றார்கள்.
- ✶ சுத்தீஸ்கர் மாநிலத்தில் கைது செய்யப்பட்ட அருட் சகோதரிகளுக்கு நீதி கிடைக்கவேண்டிய கிறிஸ்தவ ஐக்கிய பேரவையின் சார்பில் நடைபெற்ற போராட்டத்திற்கு MCYM இளைஞர்கள் கலந்துகொண்டு தங்களுடைய கண்டனங்களை தெரிவித்தார்கள்.

# MCA
## Diocese of Marthandam

### சபாதல அரையாண்டு அசம்பிளி

மலங்கரை கத்தோலிக்க இயக்கம் சபையளவிலான அரையாண்டு அசம்பளி பாறசாலை மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையம் spark, விழிஞ்ஞுத்தில் வைத்து ஜூலை மாதம் 15 மற்றும் 16 தியதிகளில் நடைபெற்றது. நமது மறைமாவட்ட மேலாண்மை குழு உறுப்பினர்கள் 16 பேர் கலந்து கொண்டனர். மறைமாவட்ட செயல்பாடுகள் தொடர்பான அறிக்கை ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தொடர் செயல் திட்டங்கள் மற்றும் நிதி உதவிகள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

### உறுப்பினர் சேர்க்கை மற்றும் உறுப்பினர் அட்டை வழங்குதல்

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் சார்பில் 2025 மற்றும் 2026 ஆண்டுகளுக்கான உறுப்பினர் அட்டை வழங்குவதற்கான துவக்கவிழா 20.07.2025 அன்னு காலை திருப்பலி முடிவில் கண்ணக்கோடு ஆலயத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குனர் பேரருட்தந்தை அர்னால்டு டயஸ் முன்னிலையில், மறைமாவட்ட தலைவர்



திரு. வர்க்கீஸ் தலைமையில் அருட்சகோதரி, நீசா ஆகியோர் இணைந்து கண்ணக்கோடு பங்கை சார்ந்த 54 உறுப்பினர்களுக்கு புதிய உறுப்பினர் அட்டை வழங்கி துவங்கி வைக்கப்பட்டது. மறைமாவட்ட அனைத்து பங்குகளிலும் உறுப்பினர் சேர்க்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### KMRM உதவித்தொகைகள்

#### 1. கலாலய சந்துன–கல்வி உதவி திட்டம்

குவைத் மலங்கரை ரைட் மூமென்ட்-ன் கீழ் உயர் கல்விக்கு பயிலும் மணவர்களுக்கு உதவி செய்யும் நோக்கில், முதலாமாண்டு படிக்க விரும்புகின்ற ஏழை மாணவர்களுக்கு தலா ரூ. 50,000/- வீதம் நமது மறைமாவட்டத்தில் மூன்று நபர்களுக்கு நிதி உதவி வழங்க மனுக்கள் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

#### 2. மார் பசேலியோஸ் வித்யா ஸ்ரீ புரஸ்கார்

மறைமாவட்டத்தை சார்ந்த மாநில பாடத்திட்டத்தில் 10-ம் வருப்பில் அதிக மதிப்பெண் பெற்ற ஒரு மாணவருக்கு ரூ. 10,000/- பணப்பரிசும் கேடயமும் மறைஒன்றிப்பு திளவிழாவில் வழங்கப் படவுள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது.

# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

## Mar Fresa - 25

மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் 2025-2026-ம் கல்வியாண்டிற்கான Mar Fresa - 25 நிகழ்வானது 16.07.2026 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக திரு. லூயிஸ் ஜார்ஜ், Managing Director (CEO), Verdent Telemetry & Antenna System Pvt. Ltd, Koch, அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்நிகழ்வின் போது கல்லூரியின் அனைத்துத் துறைத்தலைவர்களும் முதலாமாண்டு மாணவர்களுக்கு இனிப்பு வழங்கி வரவேற்றனர்.

# பெத்தானியா விழா கொண்டாட்டம்

பெத்தானியாவில் இறைமகன் இயேசு மானிட ரோடு மானிடனாக இணைந்து புனித மார்த்தா, புனித மரியா, புனித லாசரஸ் வாழ்க்கையையும், அவர்களுடன் உறவாடிய உன்னதமான நேரத்தையும் பிரதிபலிக்கும் பெத்தானியா விழா கொண்டாட்டம் 29.07.2025 அன்று, வேங்கோடு, பெதனி நவஜீவன் மேல்நிலைப்பள்ளியில் வைத்து நடைபெற்றது. இக்கொண்டாட்டத்தில் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள், உறவினர்கள், பங்கு மக்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் பங்கேற்றனர்.



# மறைவட்ட செய்திகள்

## நாகர்கோவில் மறைவட்டம்

**❖ நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் மாதாந்திர கூடுகை**

நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் மாதாந்திர கூடுகை மற்றும் ஜூலை மாத தியானமானது 21.07.2025 அன்று பார்வதிபுரம், தூய தைநேசி மாதா ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாத தியான உரையை, 'குரு நல்ல ஆயன்' என்ற தலைப்பில் அருட்தந்தை சுனீஷ் குமார் அவர்கள் வழங்கினார்கள். தொடர்ந்து மறைவட்ட குருக்களின் பணிப்பொறுப்புகளின் அனுபவ பகிர்வு மற்றும் மறைமாவட்ட பொது அறிவிப்புகள் வழங்கப்பட்டு கூடுகை இனிதே நிறைவுற்றது.

**❖ இளையோர் இயக்கம் – மார் இவானியோஸ் ஆண்டகையின் விழா**

நாகர்கோவில் மறைவட்ட MCYM ஆண்டு திட்டத்தின்படி மார் இவானியோஸ் ஆண்டகையின் விழா மற்றும் தொழுநோயாளர்கள் கிராம சந்திப்பானது 20.07.2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. இதில் இளையோர்கள் சர்வோதயா நகரிலுள்ள தொழுநோயாளர்களின் வீடுகளை சந்தித்து, அவர்களோடு கலந்துரையாடி, அவர்களுக்காக ஜெபித்து, அவர்களுக்கு போர்வைகள் வழங்கினர்.

மார் இவானியோஸ் ஆண்டகையின் விழா மாலை 3.00 மணியளவில் துவங்கியது. இந்நிகழ்வினை நாகர்கோவில் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜாண் குமார் அவர்கள்

தலைமையேற்று நடத்தினார்கள். மேலும் இந்நிகழ்வில் மறைமாவட்ட தலைவர் திரு. ஆஷ்பின் ரிச்சார்ட், மறைமாவட்ட பொதுநிலை ஊக்குநர் திரு. மனோகர், நாகர்கோயில் மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை சஜித் பிரான்சிஸ், அருட்தந்தை ராபர்ட், நாகர்கோயில் மறைவட்ட அருட்சகோதரி ஊக்குநர் அருட்சகோதரி மார்ட்டின் மரியா, அருட்சகோதரி. ஏஞ்சலின் பியோ மற்றும் அருட்சகோதரி. சூசன்னா, சிறப்பு விருந்தினர்களாக திரு. காட்சன் மற்றும் திரு. மோகன் அவர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் போது மார் இவானியோஸ் ஆண்டகையின் வாழ்க்கை வரலாற்றை நாகர்கோவில் இளையோர்கள் நடித்து, குறும்படமாக வெளியிட்டனர். மேலும் நாகர்கோவில் MCYM என்ற பெயரில் YOUTUBE சேனல் துவங்கப்பட்டது. அதில் மார் இவானியோஸ் குறும்படமானது முதல் காணொளி பதிவு செய்யப்பட்டது. விழாவின் இறுதியில் நாகர்கோவில் MCYM உதவியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## பனச்சமூடு மறைவட்டம்

### ❖ மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு கூடுகை

பனச்சமூடு மறைவட்டத்தின் மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவின் கூடுகையானது பனச்சமூடு பங்கில் வைத்து 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை S. வர்கீஸ் கோர் எப்பிஸ்கோப்போ அவர்கள் தலைமையில், அனைத்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூடுகையில், பனச்சமூடு மறைவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவின் செயலராக திரு. பிரவீன் (காஞ்சியோடு)



அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதோடு, பனச்சமூடு மறைவட்டத்திலிருந்து, மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவிற்காக திரு. கிறிஸ்டோபர் (கீழ்மாங்கோடு), திருமதி. ஏஞ்சல் ஜெயலட் ராணி (தச்சூர்கோணம்), திரு. எல்சி (பனச்சமூடு) ஆகியோர் பிரதிநிதிகளாக தேர்வுச் செய்யப்பட்டார்கள்.

## குலசேகரம் மறைவட்டம்

### ❖ மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு கூடுகை

குலசேகரம் மறைவட்டத்தின் மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவின் கூடுகையானது செருப்பாலூர் பங்கில் வைத்து 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் தலைமையில் மறைவட்டத்தை சார்ந்த அனைத்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் முன்னிலையில் நடைபெற்றது. குலசேகரம் மறைவட்ட மேய்ப்புப்பணி அறிவுரை குழுவுக்காக திரு. Dr. டால்பின் பெனிடிக்ட் அவர்கள் பொருளராகவும் (அணக்கரை) Dr. ஜினி (சாரூர்) செயலாராகவும் தேர்வு செய்யப்பட்டார்கள். அதோடு, குலசேகரம் மறைவட்டத்திலிருந்து, மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவிற்காக திரு. சில்வான்ஸ் (முதலார்), திரு. ஜஸ்டின் டேவிட் (வேர்கிளம்பி), திருமதி மாசில் மேரி (செருப்பாலூர்) மற்றும் விஜி கலா (மாத்தார்) ஆகியோர் பிரதி நிதிகளாக தேர்வுச் செய்யப்பட்டார்கள்.

# களியக்காவிளை மறைவட்டம்

❖ **மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு கூடுகை**

களியக்காவிளை மறைவட்டத்தின் மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவின் கூடுகையானது சூரியகோடு பங்கில் வைத்து 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் தலைமையில் மறைவட்டத்தை சார்ந்த அனைத்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் முன்னிலையில் நடைபெற்றது. களியக்காவிளை மறைவட்டத்திலிருந்து மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரை குழுவுக்காக திரு. சலீம் (மேக்கோடு), திரு. ஜாண் (நடைக்காவு), திரு. பால்ராஜ் (கோயிக்கல்தோப்பு), திருமதி ரஜிதா (மரியாகிரி) ஆகியோர் பிரதிநிதிகளாக தேர்வுச்செய்யப்பட்டார்கள். அருட்தந்தை டார்பெல்லோ கிறிஸ்டஸ் அவர்கள் மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு பற்றியும் மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு உறுப்பினர்களுடைய கடமைகளை பற்றியும் சிறிய வகுப்பு ஒன்றை எடுத்தார்கள்.



# ஆயரின் ஜூலை மாத நிகழ்வுகள்



1 ➢ திருவனந்தபுரம் உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

2 ➢ கோட்டார் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற குமரி மாவட்ட கத்தோலிக்க ஆயர் கூடுகையில் கலந்து கொண்டார்.

2 ➢ மார்த்தாண்டம் மேரி மக்கள் மாகாண இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி அருட்சகோதரிகளை ஆசீர்வதித்தார்.

3 ➢ கிடாரக்குழியில் அமைந்துள்ள ஷாலோம் ஹோமில் திருப்பலி நிறைவேற்றி முதியோர்களை சந்தித்து ஆசி வழங்கினார்.

3 ➢ மஞ்சத்தோப்பில் புதிதாக அமைந்துள்ள அகஸ்டினியன் அருட்சகோதரிகளின் இல்லத்தை ஆசீர்வதித்து திருப்பலி நிறைவேற்றினார்.

4 ➢ திருவனந்தபுரம் உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

4 ➢ திருவனந்தபுரம் பட்டம் உயர் பேராய பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி 'வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை சிறந்த மறைபரப்பு பணி தாகம் கொண்டவர்' என்ற தலைப்பில் மறையுரையாற்றினார்.

5-8 ➢ பூண்டியில் வைத்து நடைபெற்ற தமிழ்நாடு ஆயர் பேரவையில் கலந்து கொண்டார்.

9 ➢ MIDS பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு திருப்பலி நிறைவேற்றி உடன்பணியாளர்களை ஆசீர்வதித்தார்.

11 ➢ முக்கடல் ஷாந்தி ஆசிரமத்தில் திருப்பலி நிறைவேற்றி ஆசீர்வதித்தார்.

12 ➢ கிடாரக்குழி ஷாலோம் ஹோமில் திருப்பலி நிறைவேற்றினார்.

13 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுநாள் பாதயாத்திரையை துவங்கி வைத்தார்.

14 ➢ கிறிஸ்தவர் ஐக்கியப் பேரவை கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

14 ➢ வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுநாளை முன்னிட்டு நடைபெற்ற மாலை செபத்தில் பங்கெடுத்து மெழுகுவர்த்தி ஏந்திய பவனியில் கலந்து கொண்டார்.

15 ➢ வணக்கத்திற்குரிய மர் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுநாள் திருப்பலியில் கலந்து கொண்டார்.

16 ➢ மார் எப்ரேம் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட சிற்றாலயத்தை திறந்து வைத்து ஆசீர்வதித்து, புதுமாணவர்களையும் வரவேற்று ஆசிவழங்கினார்.

20-25 ➢ கோதமங்கலம் மறைமாவட்ட குருக்களுக்கான ஆண்டு தியானத்தை வழிநடத்தினார்.

25 ➢ மறுசீரமைக்கப்பட்ட குளப்பாறை தேவாலயத் திருத்தூயகத்தை அர்ச்சித்து ஆசீர்வதித்தார்.

26 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்புப் பணிக் கூட்டத்திற்கு தலைமைதாங்கி புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணையும் வழங்கி, முனைவர் பட்டம் பெற்ற அருட்தந்தை யூஜின் அவர்களையும் கௌரவித்தார்.

26 ➢ பெருவிளை திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றி புது நன்மை வழங்கினார்.

27 ➢ பாறசாலை மறைமாவட்டம் எரித்தாவூர் தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி நவஜோதியை ஆரம்பித்து வைத்தார்.

27-31 ➢ கோதமங்கலம் மறைமாவட்ட குருக்களுக்கான ஆண்டு தியானத்தை வழிநடத்தினார்.




## இம்மாதம் நினைவு கூர

ஆகஸ்ட் 2025

1 – பதினைந்து நோன்பு ஆரம்பம்
புனித ஸ்மூனியும் ஏழு பிள்ளைகளும் குரு எலியாசரும்
புனித அல்போன்ஸ் கோரி

3 – பெந்தக்கோஸ்துக்குப்பின் எட்டாம் ஞாயிறு
மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி தினம்

4 – குருக்களின் விண்ணகப் பாதுகாவலரான
புனித ஜான் மரிய வியானி

4 

5 – பாறசாலை மறைமாவட்டம் உதயம்

6 – நம் ஆண்டவரின் உருமாற்றம்

6 

8 – புனித டொமினிக்


9 – திருத்தூதர் மத்தியாஸ்

10 – உருமாற்றத்திற்குப்பின் முதல் ஞாயிறு
புனித லாறன்ஸ்

11 – இறைவாக்கினர் மீக்கா, புனித கிளாரா

12 – புனித சூசன்னா

13 – மார் ஹிப்போளிட்டஸ், ஜாண் பெர்க்மான்ஸ்

8 

14 – புனித மாக்ஸிமியான் கோள்பே

15 – சூனோயோ திருநாள்
பதினைந்து நோன்பு நிறைவு
மோறோன் மார் பசேயோஸ் கிளீமீஸ் காதோலிக்கோஸ் ஆண்டகையின் திருநிலைப்பாடு
இந்திய சுதந்திர தினம்

15 


17 – உருமாற்றத்திற்குப்பின் இரண்டாம் ஞாயிறு
சமூக நீதி ஞாயிறு

20 – புனித பெர்னார்டு

21 – திருத்தந்தை புனித பத்தாம் பத்திநாதர்

22 – அனனியா, அசரியா, மிசாவேல்

23 – அந்தியோக்கியாயில் மார் ஒஸ்தாத்தியோஸ்

24 – உருமாற்றத்திற்குப்பின் மூன்றாம் ஞாயிறு
மலங்கரை கத்தோலிக்க தாய்மார் சங்கம் தினம் (MCMF)

## வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் 72-வது நினைவு பாதயாத்திரை



## மேய்ப்புப்பணி அறிவுரை குழு கூடுகை



## மறைதூதுப் பணிக்குழு



## மறைபரப்புத்தளச் செய்திகள்



## DM Convent



## Mids



## Health for One Million (HOM)



## MCYM



## MCA



## Mar Ephraem College




## பெத்தானியா விழா கொண்டாட்டம்



## மறைவட்ட செய்திகள்

